புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தொல்மனத்தை எழுதுதல் : தேன்மொழிதாஸ் கவிதைகளை முன்வைத்து

முனைவர் ஏ. சைலஜா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) திருப்பத்தூர் – 635601

தமிழ் இலக்கிய மரபு கவிதையிலிருந்து தொடங்குகிறது. மரபுக்கவிதை இருபதாம்நூற்றாண்டில் உரைநடைக் கவிதையாக மாறி பின்பு புதுக்கவிதையாகித் தற்பொழுது நவீனக் கவிதையாகச் செயல்பட்டு வருகிறது. அந்நவீனக்கவிதை வரிசையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள தேன்மொழிதாஸின் ‘வெறியாட்டுப்பறை’ கவிதைத் தொகுப்பும் ஒன்று. தேன்மொழிதாஸின் கவிதைகள் இன்றைய பாசிச சமூகத்திற்கு நேர் எதிராக அன்றைய பழங்குடிச் சமூகத்தை முன்வைக்கிறது. அது சில இடங்களில் வெளிப்படையாகவும் சில இடங்களில் மறைமுகமாகவும் அதாவது உரையாடல் X மௌனம் என்ற வகையில் அமைந்திருக்கிறது. பழங்குடிச் சமூகத்தை உணர்த்த, கவிதை ‘ஆதித்திருமொழி’, ‘வெறியாட்டு’, ‘இயற்கை’, ‘மூதாதையர்’ போன்ற பல சொற்களைக் கையாளுகிறது; இன்றைய சமூகத்தை உணர்த்த ‘தேசம்’, ‘வல்லரசு’, ‘ஆள்காட்டி விரல்’, ‘எண்’ போன்ற பல சொற்களைக் கையாளுகிறது. இச்சொற்களே அன்றைய சமூகம் இயல்பானது அதாவது இயற்கையானது என்றும் இன்றைய சமூகம் கட்டப்பட்டது அதாவது செயற்கையானது என்பதையும் உணர்த்துகின்றன. எனவே கவிதை இயற்கை X செயற்கை என்ற முரணில் இயங்குகிறது.

கவிதை தொல்மனத்தை எழுதுகிறது என்று ஒற்றைவரியில் சொல்லிவிடலாம். அதனை, ஜமாலனின் “தேன்மொழிதாஸின் கவிதைகள் அடர் கானகத்திற்குள் அழைத்துச்சென்று இயற்கையின் கர்பத்திற்குள் உள்ளவற்றை காணும்படி தூண்டக்கூடியவை” (ஜமாலன், சொற்களால் நெய்யப்படும் உலகு, ப.124) என்ற வரிகள் உணர்த்திவிடுகின்றன. அத்தகைய தொல்மனத்தை ஏன் எழுத வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. மேலும், எல்லோரும் நிகழ்கால அரசியலை நிகழ்காலத்தைக் கொண்டு உரையாடிக்கொண்டிருக்க, இக்கவிதைகள் பழங்காலத்தைக்கொண்டு உரையாடுவதன் நோக்கம் என்ன என்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

ஆதிச் சமூகம் என்பது தாய்வழிச் சமூகம். இன்றைய சமூகம் என்பது தந்தைவழிச் சமூகம். பெண் சமூக அரசியலைப் பேசியிருப்பதாலும் ஆதிச் சமூகமான தாய்வழிச் சமூகத்தை முன்னிறுத்தியிருப்பதாலும் பெண்ணியம் ஆய்வு அணுகுமுறையாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஜமாலன், ‘கவிதைகளின் கனவுமொழி’ என்ற தலைப்பில் தேன்மொழிதாஸின் கவிதைகள் தொல்சமூகத்தோடு தொடர்புடையவை என்று கூறுகிறார். அக்கட்டுரை ஆய்வு முன்னோடி ஆகும். தேன்மொழிதாஸ் கவிதைகளின் பழங்காலச் சமூக இணைப்பைப் பெண்ணிய நோக்கில் ஆராய்வதால் இவ்வாய்வு முன்னோடி ஆய்விலிருந்து வேறுபடுகிறது.

## தொழிற்புரட்சியும் நவீன இலக்கியமும்

கவிதைகளுக்குள் செல்வதற்குச் சில இணைவுகள் தேவைப்படுகின்றன. யாப்பு மரபில் இருந்த இலக்கியம் குறிப்புமொழி, உரைமொழி வரிசையில் கிறித்துவர்களின் வருகையால் உரைநடைமரபு உருவானது. என்றாலும் தொழிற்புரட்சியின் விளைவாக உலகம் மரபிலிருந்து படிப்படியாக விடுபடலானது. அது இயற்கை வாழ்வைப் பின்னுக்குத் தள்ளும் எந்திர வாழ்வு. அதன்விளைவாக, அச்சு இயந்திரத் தொழில்நுட்பம் பரவியது. தமிழில் உரைநடை

இலக்கியங்களும் பதிப்புவழிப் பழைய இலக்கியங்களும் புதியத் தன்மையில் கல்விச்சூழலோடு இணைந்துப் பரவின. பொருளாதாரப் போட்டிகள் உருவாகி முதல், இரண்டாம் உலகப்போர்கள் உருவாயின. மனித அழிவுகளோடு மனங்களும் மிகப்பெரும் மாற்றங்களுக்குள்ளாயின. அதாவது அகமும் புறமுமாக மாறின. அந்த அகத்தையும் புறத்தையும் எழுதிப்பார்க்கும் இலக்கியம் உருவானது. அதுவே நவீன இலக்கியம். நவீன இலக்கியத்திற்குக் கவிதை, சிறுகதை, நாவல் போன்ற வடிவங்கள் துணைநின்றன.

அரசர்களையும் வள்ளல்களையும் எழுதிய மரபு தகர்க்கப்பட்டு மக்கள் இலக்கியம் உருவானது. என்றாலும் பெண்களின் எழுத்துமுறை உடனே சாத்தியமாகவில்லை. நவீன இலக்கியமும் பிராமணியப் பின்னணியில் உருவானது என்பதால் பெண்கள் தங்களது உரிமைகளைப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. திராவிடமும் மார்க்சியமும் தமிழ்ச் சிந்தனையில் இணைந்தபோது பெண்ணியம் பேசுவதற்கான சூழல் உருவானது. வை.மு. கோதைநாயகி அம்மாள், அம்பை, லட்சுமி, சிவசங்கரி போன்றோர் பெண்சார் சிக்கல்களைப் பேச ஆரம்பித்தனர். பின்னர் வரலாற்று அளவில் பெண்ணியம் முன்னெடுக்கப்பட்டது. அப்பொழுது மார்க்சியம் முன்னிறுத்திய தாய்வழிச் சமூகத்தைப் பெண்கள் தங்களுக்கான இடமாகக் கண்டனர். 1980களுக்குப் பிறகு பெண்ணியம் பல்வேறு வகையில் தீவிரமாகச் செயல்பட்டது.

### பெண்ணிய இலக்கியம்

பெண்ணிய இலக்கியம் குறித்துப் பலவித நூல்களும் கட்டுரைகளும் பேசியுள்ளதால், பெண்ணிய இலக்கியம் குறித்து சுருக்கமாகக் கூறிவிட்டுக் கவிதைக்குள் சென்றுவிடுவோம். பெண்கள் அனைத்துவகையிலும் தங்களுக்கான உரிமைகளைப் பேசுவது பெண்ணியமாகும். அது இலக்கியத்தில் வெளிப்படும்போது பெண்ணிய இலக்கியமாகிறது. பெண்ணிய இலக்கியம் மூன்று முதன்மையான வேலைகளைச் செய்கின்றன. ஒன்று இலக்கியத்தில் பதிவாகியுள்ள ஆணாதிக்கக் கூறுகளை வெளிப்படுத்துதல். இரண்டு இலக்கியத்தில் பதிவாகியுள்ள பெண் ஒடுக்குமுறையை வெளிப்படுத்துதல். மூன்று இலக்கியத்தில் பெண் ஆதிக்கத்திற்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக விடுதலையை எழுதுதல். மூன்றாவதாகக் கூறிய விடுதலையை எழுதுதல் வகையில் 'வெறியாட்டுப்பறை' கவிதைத் தொகுப்பு அமைந்திருக்கிறது. மேலும் பெண் விடுதலை பேசுவோர் சமூக அரசியலைப் பேசுவதில்லை என்ற ஒரு குரல் ஒலித்துக்கொண்டே உள்ளது. அதுமட்டுமல்லாது பெண்ணியம் ஆணாதிக்கத்திற்கும் சாதி ஆதிக்கத்திற்கும் எதிராக மட்டும் முன்னிறுத்தப்படுகிறது என்ற வாதமும் உள்ளது. இவற்றை தேன்மொழிதாஸ் தன்னுடைய படைப்புகள்வழி மறுக்கிறார். பெண் விடுதலையைச் சமூக அரசியல் விடுதலையோடு இணைத்துப்பார்க்கிறார். என்பதோடு சமூக அரசியல் விடுதலையை பெண்ணியத்தை முன்னிறுத்தி உரையாடலாம் என்பதையும் கவிதைகள்வழி முன்வைக்கிறார். அந்த அரசியல் குறித்து விரிவாகப் பார்க்கலாம்.

### கவிதைக்குள்

தேன்மொழிதாஸின் கவிதைகள் இயற்கையின் பேரழிவிற்கு எதிரான குரலாக வெவ்வேறு தன்மைகளில் வெளிப்படுகின்றன. சாபமாக, கோபமாக, முணுமுணுப்பாக, மௌனமாக எனப் பல வகைகளில் வெளிப்படுகிறது. இவ்வெளிப்பாடு பெரும்பாலும் ஆதிக்குடிகளைச் சார்ந்தும் ஆதிக்கக்குடிகளை எதிர்த்தும் அமைந்துள்ளது. கவிதைகள் வெளிப்படும் பாங்கினை பழங்காலச் சமூகம், இன்றைய சமூகம் என இரண்டுவகையாகப் பிரித்துக்கொள்ளலாம்.

### பழங்காலச் சமூகம்

> "...இயற்கையின் உட்கருவில் சித்தமாய்
> இருப்பது மொழி
> ஆதித்திருமொழி" (ப.37)

இக்கவிதை வரிகள் எழுதப்பட்டது பழங்காலச் சமூகத்தை நினைவூட்டுவதாக இருந்தாலும் எழுதப்படாத இன்றைய சமூகத்தையும் கூடவே நினைவூட்டுகிறது. நாம் வாழும் சமூகம் நம் நினைவில் இருந்துகொண்டே இருப்பதாலும் அதைக் கவிதை எதிர்நிலையில் வைத்து எழுதியிருப்பதாலும் அது நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. அந்தவகையில்

*இயற்கையில் இருப்பது ஆதிமொழி என்பது சாதி, மத, இன பேதமற்ற அன்பின் மொழியாகும். இயற்கை வன்முறைக்கு எதிரானது என்ற குரல் கேட்கிறது. அப்படியானால் இன்றைய சமூகம் வன்முறை சமூகம் என்பது வெளிப்படை. இக்கவிதை எழுதப்படுதற்குச் சமத்துவற்ற இக்கால மொழியே காரணமாகும். மார்க்சியம் ஆதிபொதுவுடைமைச் சமூகம் என்று ஒன்றைக் கூறுகிறது. ஆதிபொதுவுடைமைச் சமூகம் சமத்துவச் சமூகம். ஆனால் இங்கு இயற்கையின் உட்கரு என்று சொல்லப்பட்டிருப்பதால் உயிர் ஆற்றல் கொண்ட தாயாகிய பெண்ணிலிருந்து சமூகத்தைப் பார்க்கிறது. அதாவது தாய்வழிச் சமூகம் சமத்துவமான சமூகம் என்ற பொருள் கிடைக்கிறது.*

*அம்பேத்கர் நாகர்தான் திராவிடர்கள் என்று தனது ஆய்வில் கூறியிருக்கிறார். அந்த நாகரிலிருந்துதான் இன்றைய சமூகம் வளர்ந்து வந்திருக்கிறது. என்பதை,*

*“..நாகத்தின் - வால் நட்சத்திரமானது*
*நாகத்தின் எலும்புகள் நகரங்களாயின” (ப.86)*

*என்ற வரிகள் உணர்த்துகின்றன. இது வெளிப்படையாக ஆதி சமூகத்தைக் கொண்டாடுகிறது. ஆதி சமூகம் இல்லாமல் இன்றைய சமூகம் இல்லவே இல்லை என்பதை கவிதை அழுத்தமாக முன்வைக்கிறது. அதேநேரம் அது தற்பொழுது மறக்கப்பட்டுவிட்டதையும் மௌனமாகக் கவிதை சொல்கிறது. இதே தன்மையில் “சிந்துவெளி புன்னகைக்கிறது” (ப.67) என்ற வரியும் அமைந்திருக்கிறது. இங்கு ஒரு கேள்வி தோன்றுகிறது. அது பழங்காலச் சமூகம் ‘ஆதித்திருமொழி’, ‘நாகர்’, ‘சிந்துவெளி’ என்று வெவ்வேறு தன்மையில் சொல்லப்பட்டிருக்கிறதே? என்பதாகும். ஆதிச் சமூகம் குறித்த ஆய்வுகள் தமிழில் வெவ்வேறு தன்மையில்தான் அமைந்திருக்கின்றன. மேற்சொன்ன அனைத்தையும் ஆதிச் சமூகமாக பல ஆய்வுகள் முன்வைக்கின்றன. இக்கவிதைகளின் நோக்கம் ஆதிச் சமூகத்தை முன்னிறுத்துவதுதான். எவை தமிழ் உலகின் தொடக்கமாக இருந்தாலும் அங்கிருந்து வளர்ந்து வந்ததுதான் இன்றைய சமூகம். எனவே ஆதி என்பது தாய்தான். அந்தத் தாய்நிலம் எப்படிப்பட்டது என்பதை,*

*“நாம் ஆடி நிலைத்த நிலத்தில்*
*நம் உயிர்ப்பாடல்கள் இருக்கின்றன” (ப.36)*

*என்ற வரிகள் உயிர்ப்புடன் எடுத்தியம்புகின்றன. ஆதிச் சமூகம் உயிர்த்தன்மை கொண்டது என்பதை உணர்த்துவதாகக் கவிதை வரிகள் அமைந்துள்ளன. மேலும் நம் குரல்கள் இன்று நசுக்கப்பட்டுள்ளன. நசுக்கப்படாத குரல்களைக் கொண்ட சமூகமாக ஆதிச் சமூகம் இருக்கிறது என்பதைக் கவிதை படம்பிடிக்கிறது.*

*இன்றைய சமூகம்*

*“…அரசு திருடன் கையில் அகப்படும்*
*தங்க வாள் ” (ப.65)*

*என்ற வரிகள் அரசு என்ற கருத்துரு சில தனிநபர்களின் தற்சார்பு சிந்தனைகளால் சீரழிக்கப்படுவதைச் சுட்டுகின்றன. அரசு தற்சார்பு சிந்தனையாளர்களால் ஆளப்படுகிறது என்னும்போது வல்லரசு யாருக்கான கனவாக இருக்கும் என்பது வெளிப்படை. ஆதிச் சமூகத்தின் நீட்சியான பொதுச் சமூக மக்கள் புறம் ஒதுக்கப்படுவதோடு ஆதிக்க அரசால் பயன்படுத்திக்கொள்ளவும் படுகிறார்கள் என்பதை,*

*“பலகோடி மக்களின்*
*பதறும் கைகளை*
*தேசத்தின் தோள்களில் சிறகுகளாக*
*கற்பனை செய்ய முடியுமா*
*ஆனால் ஒரு வல்லரசு*
*நிகழ்த்திக் காட்டும்” (ப.74)*

*என்ற வரிகள் காட்டுகின்றன. மக்கள் இல்லாமல் ஒரு அரசால் இயங்க முடியாது. சனநாயகத்தின் அடிப்படையே மக்கள். மக்களுக்கான ஆயுதமாக இருக்க வேண்டிய அரசு மக்களை ஆயுதமாக மாற்றி விடுகிறது. முடியாட்சி சமூகத்தில் மக்களின் உழைப்பு சுரண்டப்பட்டது போல் சனநாயக சமூகத்திலும் சுரண்டப்படுவது சனநாயகத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறது. அதுவே கவிதை சனநாயக சமூகத்திற்கு எதிராக ஆதிச் சமூகத்தை முன்னிறுத்தக் காரணமாகிறது. ஆதிச் சமூகத்தின் நீட்சி மக்கள்தான். ஆனால், அந்த மக்கள்சார் அரசு மக்களுக்கான அரசு அல்ல. அதனால்தான்*

இன்றைய அரசைக் கவிதை ஆதிச் சமூகத்திற்கு எதிராக முன்னிறுத்துகிறது. ஆதிச் சமூகத்திற்கு எதிராக மக்களை, கவிதை முன்னிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று அனைவரும் ஆதார்களாக மாறிவிட்டார்கள். ஆதார் என்பது எண். அப்படியானால், மக்கள் எண்களாக மாற்றப்பட்டு விட்டதை, "நான் என்பது எத்தனையாவது எண்" (ப.102) என்ற வரி உணர்த்துகிறது. பாசிச ஆட்சியில் ஆதார் எண்ணை வைத்து மண்டை ஓட்டினையே ஆராய்ந்து நம்முடைய சரீரத்தையே எடுத்துக்கொள்கிறார்கள் என்ற பரிதாப நிலையைக் கவிதை உணர்த்துகிறது. இங்கு எழுதப்பட்டதை விட, எழுதப்படாத ஆதிச் சமூகம் நினைவுக்குள் வருவது தவிர்க்க முடியாததாகிறது.

நீலத்தை விடுதலையின் குறியீடாக எடுத்துக்கொண்டு, "நீலத்தில் என்ன இருக்கிறது" (ப.88) என்ற கேள்வி கேட்கப்பட்டு, அதில் "யாவும் யாவருக்கும் என்றிருக்கிறது" (ப.88) என்ற பதிலும் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு விடுதலை என்பதை ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்குரியதாக ஆக்காமல் சமூக, அரசியல் விடுதலை அனைவருக்குமானதாகக் கவிதை முன்வைக்கிறது. இதுவே 'வெறியாட்டுப்பறை' தொகுப்பின் சிறப்பு. இயற்கை அனைவருக்குமாகச் செயல்படக்கூடியது; உயிர்களை உருவாக்கக்கூடியது. பெண்ணும் உயிரை உருவாக்குகிறாள். எனவே இயற்கையையும் பெண்ணையும் பிரிக்க முடியாது. இவ்வகையில்தான் பெண் ஆதிச் சமூகத்தை விடுதலைக்குரிய சமூகமாக எடுப்பதையும் அது அனைவருக்குமான விடுதலையாக முன்வைப்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

பழங்குடிச் சமூகம் ஆதியானது என்பதையும் இன்றைய சமூகம் ஆதிக்கமானது என்பதையும் கவிதைகள் உணர்த்துகின்றன. ஆதி இயற்கையோடும் ஆதிக்கம் செயற்கையோடும் தொடர்புடையவை. இது ஒரு ஆணாதிக்கச் சமூகம். எனவே இன்றைய ஆதிக்கம் ஆணாதிக்கத்தால் உருவாக்கப்பட்டது என்று துணிந்து கூறலாம். இந்த ஆணாதிக்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட சிந்தனைதான் ஆதிச் சமூகம்சார் சமத்துவச் சிந்தனை. அன்றைய சமூகம் பெண்ணால் உருவாக்கப்பட்டது என்றால் இன்றைய சமூகம் ஆணால் உருவாக்கப்பட்டது. இதை இரண்டு விதமாகப் பார்க்கலாம். முழுவதும் செயற்கையாக மாறிய அரசை அரசற்ற இயற்கையால்தான் வெல்ல முடியும். அதேநேரம் சமத்துவமான அரசு அன்பை ஆயுதமாகக் கொண்ட ஆதித்தாயாகிய பெண்ணால்தான் சாத்தியம். பெண்ணால் உருவாக்கப்பட்ட ஆண், ஆதிச் சமூகச் சிந்தனையைக்கொண்ட பெண்ணுக்குள் வருவதில்தான் அதாவது தாய்வழிச் சமூகத்தின் சமத்துவத்திற்குள் வருவதில்தான் முழுமையான சமூக, அரசியல் விடுதலை இருக்கிறது. இக்கவிதைகளின் இயக்கம் அவ்விடுதலையை முன்னிறுத்துவதிலே அடங்கியிருக்கிறது.

ஆணாதிக்கம் பாசிசத்தோடும் அதிகாரத்தோடும் அரசியலோடும் கூட்டு வைத்துள்ளது. எனவே பெண்விடுதலையைச் சமூக, அரசியல் விடுதலையாக முன்னெடுப்பதே பொருத்தமானது என்பதைக் கவிதைகள் உணர்த்துகின்றன. தொல்மனத்தை எழுதுவதன்வழி, தேன்மொழிதாஸின் கவிதைகள் ஆதிக்கச் சமூகமான இன்றைய சமூகத்தில் தொல்மனத்தை உருவாக்குகிறது. அதாவது ஆதிக்க சமூகத்திற்கு எதிராக ஆதிச் சமூகத்தை நிகழ்காலத்திற்கு எடுத்து வருகிறது. அந்தவகையில் அகமாகிய இயற்கை பெண் கருப்பையாக கற்பிதம் செய்யப்பட்டு கருப்பை அற்ற செயற்கை சமூகத்தோடு உரையாடும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

தேன்மொழிதாஸ் இன்றைய சமூகத்தில் தொல்மனத்தை உருவாக்குவதே, நவீன இலக்கியத்திற்கு அவரது பங்களிப்பாக அமைகிறது. இது ஒரு ஆணின் சிந்தனைக்குள் தோன்றுவது குறைவு. காரணம் பெண் ஆணாதிக்கத்திற்குக் கட்டுப்பட்டு இருக்கும் அதேவேளையில் இயற்கையோடு சார்ந்தும் இருக்கிறாள். சான்று : எதார்த்த உலகில் ஒரு வீட்டில் குழந்தை சாப்பிடாததைக் குறித்து அப்பா கவலைப்படுவதை விட, அம்மா கவலைப்படுவது அதிகம். அம்மா உயிர் இரக்கம் உடையவளாக இருக்கிறாள். உயிர் உருவாக்கத்திற்கும் அவளுக்கும் நேரடித்தொடர்பு உண்டு. சங்க இலக்கியத்தில் ஆண் குழந்தையைப் பெற்று போருக்கு அனுப்பும் பெண், அவன் போர்க்களத்தில் வீரமரணம் அடைந்ததை, "வாடு முலைகள் ஊறிச் சுரந்தன" (புற.295) என்கிறார். இறப்பை வீரத்தோடும் அதேநேரத்தில் இயற்கைசார் செயலோடும் இணைக்கிறாள். இது பெண்ணுக்கே சாத்தியம். ஆணாதிக்க உலகத்தில் வாழ்வதற்காக அவர்களையும் திருப்திப்படுத்துகிறாள்; அதேநேரம் தனக்கான இடத்தையும் உருவாக்கிக்கொள்கிறாள். அதனால்தான் தேன்மொழிதாஸின் கவிதைகள் பெண் இயங்கியல் சமூகமான ஆதிச் சமூகத்தின்வழி சமூக, அரசியல் விடுதலையைப் பேசமுடிகின்றன.

*பயன்பட்ட நூல்கள்*

- *தமிழவன், திராவிடம் தமிழ்த்தேசம், கதையாடல் ஒரு நூற்றாண்டுத் தமிழ்ச் சிந்தனையின் வரலாறு, அடையாளம், திருச்சி, 2014.*
- *தேன்மொழிதாஸ், வெறியாட்டுப்பறை, புதுஎழுத்து, கிருட்டிணகிரி, 2021.*
- *ஜமாலன், கவிதைகளின் கனவுமொழி (கட்.), சொற்களால் நெய்யப்படும் உலகு, நன்னூல் பதிப்பகம், சென்னை, 2021.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********